IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.239/2024

dated : 19.02.2026

D.W.1

Name மகேந்திரராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை (தொடர்ச்சி)**

1ம் பிரதிவாதி என் தாயார், 3ம் பிரதிவாதி என் உடன் பிறந்த சகோதரி. எதிர்வழக்குரை மற்றும் முதல்விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்ய என் வழக்கறிஞருக்கு நான்தான் தகவல் சொன்னேன். எதிர்வழக்குரையுடன் ஏற்பாட்டு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரை பத்தி 10 மற்றும் 11 ஆகியவற்றில் 3ம்பிரதிவாதிக்கு என் தந்தை எழுதிக் கொடுத்துள்ள ஏற்பாடு எழுதிக் கொடுத்திருப்பதாகவும் அதன்படி அவர் அனுபவித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். முதல்விசாரணை வாக்குமூலம் பத்தி 12, 13 ஆகியவற்றிலும் அதேபோலவே குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கூறியுள்ள விவரங்களுக்கு மாறாக தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள ஏற்பாட்டு ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் தந்தை இறக்கும் வரை என் கட்டுப்பாட்டில் இருந்தார் என்றால் சரியல்ல. என் தந்தை 2017 லிருந்து வேலைக்குச் செல்லவில்லை.

2017 முதல் அவருடைய வேலைகளை அவரால் செய்யமுடியாமல் இருந்தார் என்றால் பக்கவாதம் ஏற்பட்டிருந்தார். நான்தான் அவரை முழுமையாக வைத்திருந்தேன் என்றால் சரிதான். அவர் என்மீது முழுமையாக நம்பிக்கை வைத்திருந்தார் என்றால் சரிதான். பக்கவாதம் ஏற்பட்டதால் அவருக்கு ஞாபக மறதியும், புரிந்து கொள்ளும் திறனும் குறைந்துவிட்டது என்றால் சரியல்ல. அவர் மருத்துவ சிகிச்சை பெற்று வந்தார் என்றால் சரிதான் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் இருந்தது. ஏற்பாடு ஆவணம் எழுதும் போது என் தாயார் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வரவில்லை. ஏற்பாடு ஆவணம் பற்றி என் தாயாருக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. அவ்வாறு ஆவணம் எழுதுவதற்கு உறவினர் எவரையும் அழைத்துச் செல்லாததற்கு குறிப்பிட்ட காரணம் ஏதும் இல்லை என்றால் சரிதான். 1 வது தபசில் 2 வது இலக்கச் சொத்தில் ஒரு பகுதியை மட்டும் என் தந்தை கிரையம் பெற்றதாக கூறப்படுகிறது என்றால் சரிதான். மற்றொரு என் தந்தைக்கு பூர்விக சொத்தில் பாகப்பிரிவினையில் கிடைத்ததாகும். என் தகப்பனாரும் அவரது சகோதரர் ஆறுமுக நாடாரும் அவரவர் பாகச் சொத்தை பொறுத்து தொகை வாங்காமல் கிரையம் எழுதிக் கொடுத்துள்ளார்கள். அந்த கிரைய ஆவணத்தைதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6, 7, ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. அது என் தந்தையை ஏமாற்றி பெறப்பட்ட ஆவணம் என்றும் அவர் நல்ல மனநிலையுடனும், சுய சிந்தனையுடனும் எழுதி வைத்த ஆவணமல்ல என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களில் ஒருபோதும்

நடைமுறைக்கு வந்ததில்லை என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் நன்கொடை ஆவணம் என் சகோதரிக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வருவதாக கூறியநிலையில் அதற்கு மாறாக ஆவணங்களை தாக்கல் செய்து வீண் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பூர்விக சொத்துக்களை பொறுத்து என் தந்தை செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க விரும்பியதில்லை என்றும் அது செல்லத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குரைச் சொத்துக்கள் பூர்விக சொத்துக்கள் என்பதால் வாதிக்கு விகித்தாச்சார பாகம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.19 17:58:50 +0530